LIBRARY
21 SEP 1962
STATE LEGISLATURE, MADRAS

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Monday, the 9th July 1962.

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRRD QUESTIONS

வேலூர் ஸ்ரீ ஜலகண்டீஸ்வரர் ஆலயம் (புனர் நிர்மாணம்).

**187 கேள்வி.—திரு. ர. ஜீவரத்தினம்: கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—*

(அ) வேலூர் கோட்டையிலுள்ள ஸ்ரீ ஜலகண்டீஸ்வரர் ஆலயம் புனருத்தாரணம் செய்து பூஜை செய்ய அனுமதிக்கும்படி வேலூர் பொதுமக்களிடமிருந்து சர்க்காருக்கு மகஜர் வந்ததா?

(இ) அப்படியாயின், சர்க்கார் எடுத்துக்கொண்டுள்ள நடவடிக்கைகள் என்ன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: *(அ)* Yes, Sir.

(இ) A sum of Rs. 1 lakh was estimated to be the amount required for the revival of worship in the temple. The Commissioner, Hindu Religious and Charitable Endowments is looking into the matter.

திரு. எம். டி. தியாகராஜப் பிள்ளை: இந்தத் தேவஸ்தானத்தினுடைய திருப்பணிக்கு அரசாங்கம் நிதி கொடுத்து உதவ முன்வருவார்களா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அரசாங்கம் நிதி ஒதுக்குகின்ற பிரச்சனை இதிலே ஒன்றுமில்லை. அந்தக் கட்டடம் இப்பொழுது (‘ஏன்ஷியண்டு மான்யுமெண்டு பிரஸர்வேஷன் ஆக்ட்’) பழைய பொருள்களின் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் மத்திய அரசாங்கப் பாதுகாப்பில் இருக்கிறது. ஆனால், அங்கே இப்பொழுது விக்ரகம் ஒன்றும் இல்லை. பூஜை ஒன்றும் இல்லை. முன்பு இருந்திருக்க வேண்டும். அது கோவிலாகத்தான் முன்பு இருந்தது. இப்பொழுது அங்கே உள்ளவர்கள் பூஜைக்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று சொல்லுகிறார்கள். ‘ஏன்ஷியண்டு மான்யுமெண்டு பிரஸர்வேஷன் ஆக்ட்’படியும் அந்தக் கட்டடம் பாதுகாக்கப்பட வேண்டும். அதற்குக் குந்தகம் இல்லாமல் பூஜைக்கு ஏற்பாடு செய்வதற்கு மத்திய அரசாங்கத்தின் அனுமதியையும் பெறலாம் என்றும் நிரந்தரமாகப் பூஜை செய்வதற்கு பொது மக்கள் முன்வந்து ஒரு லட்ச ரூபாய் நிதி சேகரித்தால், அதற்குப் பிறகு இதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யலாம் என்பதாக இந்த அரசாங்கம் தெரிவித்திருக்கிறது.

[9th July 1962

திரு. சா. கணேசன்: "ஏன்ஷியண்டு மான்யுமெண்டு பிரிஸர் வேஷன் ஆக்டின்" கீழே இம்மாதிரி பல்வேறு ஆலயங்கள் பாது காப்பிலிருந்தும், அந்த ஆலயங்களில் பூஜைகள் நடைபெறுகின்ற நிலைமை நமது மாகாணத்தில் பரவலாக இருக்கிறபொழுது, வேலூரிலும் அம்மாதிரி ஏற்பாடு செய்வது சுலபம்தானே?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: தொடர்ந்து பூஜையிலே இருக் கிற கோவில்கள் 'ஏன்ஷியண்டு மான்யுமெண்டு பிரஸர்வேஷன் ஆக்ட்' கீழ் மத்திய அரசாங்கத்தின்கீழ் இருந்தாலும், பூஜை நடைபெற்றுவருகிறது. உதாரணமாக கங்கைகொண்டான் சோழபுரம் கோவில் ரொம்ப அற்புதமான கட்டடம். மத்திய அரசாங்கத்தின் 'ஆர்கியலாஜிகல்' இலாகாவின்மூலம் கட்டடம் பழுது பார்ப்பதற்காக வருஷத்திற்கு ரூ. 5,000 செலவு செய்யப் படுகிறது. ஆனால், அங்கு பூஜை இல்லை. சுவாமியும் இல்லை. வெறும் கட்டடம்தான் இருக்கிறது. ஒரு விக்ரஹம் பிரதிஷ்டை செய்து பூஜை நிரந்தரமாக நடப்பதற்கு நிதி வேண்டும்.

SRI C. CHIRANJEEVULU NAIDU: Sir, may I know at what stage the renovation of Tiruvalangadu temple stands?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Estimates have been prepared and an Assistant Engineer has been appointed to be in charge of the designs and construction and the work will be taken up presently.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்: முதன் முதல் கோவில்கள் கட்டப்பட்டபொழுதே அவைகளுக்கென்று சில மான்யங்கள் ஒதுக்கப்பட்டு இருக்குமே? அதே மாதிரி இந்த வேலூரிலுள்ள கோவிலுக்கும் பழைய காலத்தில் அதற்கென்று ஒதுக்கிய மான்யம் என்னவாயிற்று?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: எந்தக் காலத்தில் கோவில் பூஜை இங்கே நடந்தது என்று நமக்குத் தெரியவில்லை. சுமார் 100 ஆண்டுகளுக்கு முன்பு பூஜை நடந்து இருக்கவேண்டும். இப் பொழுது அதற்காக ஒரு மான்யமும் இருப்பதாகத் தெரியவில்லை. வேலூருக்கு சுவாமி இல்லாத கோவில் என்ற ஒரு பெயரே வந்து விட்டது.

திரு. கே. ஏ. மதியழகன்: இதுபோன்று பூஜை நின்றுபோன கோவில்கள் தமிழ் நாட்டில் மொத்தம் எத்தனை இருக்கும்?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அந்தக் கணக்கு என்னிடம் இல்லை. அப்படி ஒன்றும் அதிகமாக இருக்காது என்றுதான் நினைக்கிறேன்.

Recommendations of Third Finance Commission

MR. SPEAKER: Question No. 188 will be postponed as requested by the hon. Member, who has given notice of it.